## கோவை மத்திய சிறையில் சிறைத் துறை டிஜிபி ஆய்வு

**கோவை, ஏப்.10:** கோவை மத்திய சிறையில் தமிழக சிறைத் துறை டிஜிபி மகேஷ்வர் தயாள் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மத்திய சிறையில் தண்டனைக் கைதிகள், ஆயுள் தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள் என சுமார் 2,000-க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கோவை மத்திய சிறையில் தமிழக சிறைத் துறை டிஜிபி மகேஷ்வர் தயாள் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது சிறையில் உள்ள ஒவ்வொரு பகுதியாகச் சென்று ஆய்வு நடத்தியதோடு, சிறைத் துறை விதிகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது குறித்தும், பதிவேடுகள், உணவுக் கூடங்கள், சிறை மருத்துவமனை, சிறைக் கைதிகள் தொழிற்பயிற்சிக் கூடம் உள்ளிட்டவை முறையாகப் பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, சிறைத் துறை டிஐஜி ஜெயபாரதி, கோவை மத்திய சிறைக் கண்காணிப்பாளர் செந்தில்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இந்த ஆய்வைத் தொடர்ந்து சிறைத் துறை டிஜிபி மகேஷ்வர் தயாள் கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் மாநகர காவல் ஆணையர் ஆ.சரவணசுந்தருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

## ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம்



ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி, தேசிய மின்னணுவியல் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட கல்லூரி முதல்வர் செளந்தர்ராஜன், தேசிய மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) செளகத் செருகட். உடன், கல்லூரி நிர்வாகிகள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்டோர்.

**கோவை, ஏப். 10:** கோவை துடியலூர், வட்டமலைப்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியும், தேசிய மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

அதிநவீன தொழில்நுட்பங்களில் பல்வேறு படிப்புகள், தொழில் துறை பயிற்சி, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், தொடர் கல்வி மூலம் தற்போதைய தொழில்நுட்பங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பது போன்றவற்றுக்காக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசின் மின்னணு, தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பான தேசிய மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது, தகவல், மின்னணு, தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் மனிதவள மேம்பாடு தொடர்பான செயல்பாடுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, நாடு முழுவதும் டிஜிட்டல் கல்வி, தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் முறையான, முறைசாரா கல்வி, தொழில் சார்ந்த தரமான கல்வி, அதிநவீன தொழில்நுட்பங்களில் பயிற்சித் திட்டங்களை மேம்படுத்துவது ஆகியவற்றின் மூலம் மாணவர்களுக்கு பயனளிக்கும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கல்லூரி முதல்வர் செளந்தர்ராஜன், தேசிய மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) செளகத் செருகட் ஆகியோர் கையொப்பமிட்டனர். நிகழ்ச்சியில், கல்லூரியின் தொடர் கல்வி மையத் தலைவர் என்.சதீஷ்குமார், ஆராய்ச்சியாளர்கள் சஞ்சீவ்குமார் ஜா, முனிவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

## கோவை அதிமுக நிர்வாகி கட்சியில் இருந்து விலகுவதாக அறிவிப்பு



**கோவை, ஏப். 10:** கோவையைச் சேர்ந்த அதிமுக நிர்வாகி என்ஜினீயர் ஆர்.சந்திரசேகர், கட்சியில் இருந்து விலகுவதாக வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும் தொண்டாமுத்தூர் தொகுதி எம்எல்ஏவுமான எஸ்.பி.வேலுமணிக்குமிகவும்நெருக்கமான இவர் அதிமுகவின் புறநகர் தெற்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி இணைச் செயலராக இருந்து வருகிறார். அதிமுகவின் அதிகாரபூர்வ நாளிதழான நமது அம்மாவின் வெளியீட்டாளராகவும் சந்திரசேகர் இருந்து வருகிறார்.

இவரது மனைவி சர்மிளா சந்திரசேகர் கோவை மாநகராட்சியின் 38-ஆவது வார்டு உறுப்பினராகவும், கோவை மாநகர் மாவட்ட இளைஞர் பாசறை, இளம்பெண்கள் பாசறையின் இணைச் செயலராகவும் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் தனிப்பட்ட காரணங்களால் கட்சியில் இருந்து விலகுவதாக சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பணி காரணமாக தொடர்ந்து கட்சிப் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியாத சூழல் உள்ளது. எனவே கட்சியின் அனைத்து வித பொறுப்புகளில் இருந்தும் என்னை முழுமையாக விடுவித்துக் கொள்கிறேன். கட்சியில் எனக்கு வாய்ப்பளித்த, அங்கீகாரம் அளித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறியிருக்கிறார்.

இந்நிலையில், சென்னை வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை வியாழக்கிழமை சந்திக்கு பாஜகவில் அவர் இணைய திட்டமிட்டுள்ளதாக கட்சி வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

## சிறுமுகை அருகே ஆட்டோ மீது இருசக்கர வாகனம் மோதி 3 பேர் உயிரிழப்பு

**மேட்டுப்பாளையம், ஏப்.10:** மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகையை அடுத்த ஆலாங்கொம்பு பகுதியில் ஆட்டோ மீது இருசக்கர வாகனம் மோதியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

மேட்டுப்பாளையம் அருகே காரமடை பகுதியைச் சேர்ந்தவர் நகுலன் (17), விதுன் (21), பிஜூ (19), வினீத் (21) ஆகிய 4 பேர் காரமடையில் இருந்து தென்திருப்பதி நால்ரோடு வழியாக சிறுமுகை பழத்தோட்டம் செல்ல ஒரே இருசக்கர வாகனத்தில் வியாழக்கிழமை இரவு சென்றுள்ளனர்.

ஜடையம்பாளையத்தில் இருந்து தென் திருப்பதி நால்ரோடு நோக்கி ஓட்டுநர் உள்பட 7 பேருடன் சென்ற ஆட்டோ ஆலாங்கொம்பு எம்.ஜி.ஆர். சிலை அருகே வந்தபோது எதிரே வந்த இருசக்கர வாகனம் ஆட்டோ மீது நேருக்குநேர் மோதியது.

இதில் இருசக்கர வாகனத்தில் வந்த நகுலன், விதுன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் படுகாயமடைந்த பிஜூ, வினீத் ஆகியோரை அக்கம்பக்கத்தினர் மீட்டு மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிஜூ உயிரிழந்தார். படுகாயமடைந்த வினீத் உயர் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மேலும் ஆட்டோ ஓட்டுநர் உள்பட 7 பேர் சிறுகாயங்களுடன் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இந்த விபத்து குறித்து சிறுமுகை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யுஜடி கல்லூரியில் கலைத் திருவிழா



விழாவில் சிறப்பிடம் பெற்ற குழந்தைக்கு பரிசு வழங்குகிறார் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் தலைவர் தலைவர் சண்முகம்.

**பெ.நா.பாளையம், ஏப்.10:** கோவை பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள யுனைடெட் தொழில்நுட்பக் கல்லூரியில் உத்ரா 2ஓ25 தொழில்நுட்ப கருத்தரங்கு மற்றும் கலை திருவிழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு, யுனைடெட் கல்வி நிறுவனங்களின் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். கல்லூரியின் கல்வி இயக்குநர் மைதிலி சண்முகம், துணை முதல்வர் கோகிலா, யுனைடெட் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் விஜயா ஆகியோர் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர்.

பொறியியல் கல்லூரியின் முதல்வர் அப்துல்ரஃப் வரவேற்றார். விழாவின் நோக்கம் குறித்து கணினி அறிவியல் துறைத் தலைவர் சிந்துஜா எடுத்துரைத்தார். தொடர்ந்து செவ்வாய், புதன் இருநாள்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில், மாணவர்களுக்கான கோடத்தான், ஏக்கத்தான், டெக்னிக்கல் குவிஸ், போட்டோகிராபி, விடியோ பிரசன்டேஷன், ஷார்ட் பிலிம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

இதில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு திறமைகளை வெளிப்படுத்தினர். வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. டிஜிட்டல் மீடியா துறையில் சிறந்து விளங்கி வரும் பேபி சாண்விகா ஸ்ரீ, ஆர்.ஜே. தீபக், பரத், சூர்யா, துர்கா ராஜசேகர், அசார் உள்ளிட்ட 6 பேருக்கு டிஜிட்டல் மீடியா எக்ஸலன்ஸ் விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் யுனைடெட் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியர் கவிராசன் தலைமையில் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

## குரூப் 1 தேர்வு முடிவுகள் வெளியீடு: சங்கர் ஐஏஎஸ் அகாதெமி மாணவர்கள் சிறப்பிடம்

**கோவை, ஏப். 10:** குரூப் 1 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், சங்கர் ஐஏஎஸ் அகாதெமி மாணவர்கள் சிறப்பிடம் பிடித்துள்ளனர்.

இது குறித்து சங்கர் ஐஏஎஸ் அகாதெமியின் கோவை கிளைத் தலைவர் அருண் செந்தில்நாதன் கூறியிருப்பதாவது:

வருவாய் கோட்டாட்சியர், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் உள்ளிட்ட 90 காலிப் பணியிடங்களுக்கான குரூப் 1 தேர்வு, முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்காணல் என 3 கட்டங்களாக நடைபெற்றது.

முதல்நிலைத் தேர்வை 2.38 லட்சம் பேர் எழுதிய நிலையில், 190 பேர் நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றிருந்தனர். இந்த நிலையில் நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன் கூடிய தேர்வர்களின் தற்காலிக மதிப்பெண் பட்டியலை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. இதில் சங்கர் ஐஏஎஸ் அகாதெமியில் பயிற்சி பெற்ற 121 மாணவர்கள் நேர்முகத் தேர்வில் பங்கேற்றனர். தேர்வு செய்யப்பட்ட 90 பேரில் 47 பேர் எங்களது அகாதெமியை சேர்ந்தவர்கள்.

தேர்வானவர்களில் முதல் 10 இடங்களில் எங்களது அகாதெமியின் மாணவர்கள் 5 இடங்களைப் பிடித்துள்ளனர். கோவை கிளை மாணவர்கள் லார்சன் இஸ்ரேல் (7 ஆவது இடம்), மதுவர்ஷினி (11-ஆவது இடம்), ஹர்ஷா உன்னி (13-ஆவது இடம்) பிடித்துள்ளனர். முன்னதாக கதிர் செல்வி முதல் இடத்தையும், ஹரி பிரியங்கா 3-ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

அடுத்த குரூப் 1, 2 தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் ஏப்ரல் 14 முதல் தொடங்குகின்றன. ஆர்வமுள்ளவர்கள் 73059 51898, 98407 02761 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## பள்ளிகளில் சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

**கோவை, ஏப். 10:** கோவை மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கோவை மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 331 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமிக்கப்பட உள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தெரிவித்துக் கொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்படுவோர்களுக்கு, தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்குப் பின் சிறப்பு காலமுறை ஊதியத்தில் ஊதியம் வழங்கப்படும்.

இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும். நியமனம் கோரும் மையத்துக்கும், விண்ணப்பதாரரின் குடியிருப்புக்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி நாள் ஏப்ரல் 28-ஆகும். பள்ளி மாற்றுச் சான்றிதழ், 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை, ஜாதிச் சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின்போது, அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் நிறுவன ஊழியரிடம் கைப்பேசி பறித்த 2 பேர் கைது

**கோவை, ஏப்.10:** கோவையில் தனியார் நிறுவன ஊழியரிடம் கைப்பேசி பறித்த 2 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை ரத்தினபுரி தில்லை நகரைச் சேர்ந்தவர் கெளதம் (29), தனியார் நிறுவன ஊழியர். இவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவுப் பணி முடித்துவிட்டு தனது வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர் அவரிடம் இருந்து கைப்பேசியை பறித்துவிட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து கெளதம் அளித்த புகாரின்பேரில், ரத்தினபுரி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில், ரத்தினபுரி மேம்பாலப் பகுதியில் இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர் சாலையோர தடுப்புச் சுவரில் மோதிய விபத்தில் சிக்கியதாக ரத்தினபுரி போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து போலீஸார் அங்கு செல்வதற்குள் அந்த வழியாக வந்தவர்கள் விபத்தில் சிக்கிய 2 பேரையும் மீட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இதையடுத்து போலீஸார் மருத்துவமனைக்குச் சென்று நடத்திய விசாரணையில் தனியார் நிறுவன ஊழியர் கெளதமிடம் கைப்பேசி பறித்துவிட்டு தப்பிச் செல்லும்போது விபத்தில் சிக்கி கால் முறிவு ஏற்பட்டதும், அவர்கள் ரத்தினபுரி தயிர் இட்டேரி பகுதியைச் சேர்ந்த அம்புரோஸ் (28) மற்றும் சுப்பையா லே-அவுட் பகுதியைச் சேர்ந்த லாரன்ஸ் (27) என்பதும், அவர்கள் 2 பேர் மீதும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

இதையடுத்து 2 பேரையும் கைது செய்த போலீஸார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ADITYA BIRLA CAPITAL

PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வெரவல், குஜராத் - 362 266

கிளை அலுவலகம் : 2 வது தளம், பில்டிங் எண். 739, நில்ஸ்பான் ஷோரூம் மேல் தளம், அவினாசி சாலை, கோயமுத்தூர் - 641 018

பிற்சேர்க்கை - IV-A (பார்க்க விதி 8(6) க்கான விதி விலக்கு)
அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அகமதாபாத்திலுள்ள நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயத்தில் 24.03.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் முறையாக பதிவு செய்யப்பட்ட 11.03.2024 தேதிய இணைவு திட்டத்தின் வாயிலாக, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட் மற்றும் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட் ஆகியவற்றுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட இணைவின் படி, இதன் கீழ்க்கண்ட ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்து தொடர்பாக, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிட் - ஆல் எடுக்கப்பட்ட அனைத்து சர்ஃபாசி சட்ட நடவடிக்கைகளும் நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 230 & 232 ன் படி இணைக்கப்பட்ட நிறுவனமான ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட் - க்கு மாற்றலாகி உள்ளது. அதனால், இந்த அறிவிப்பு ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட் - ஆல் வழங்கப்படுகிறது.

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) மற்றும் 9 (1) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், அமாவர் கடனுக்கான நிலுவைகளுக்கான ஜாமீனாக, ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்ற கடனளித்த, ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், 24.02.2025 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்களான M/s. ஸ்ரீனிவாசா கார்மெண்ட் பிரைவேட் லிட் (SGPL), திரு. B. ஸ்ரீராமுலு மற்றும் திருமதி. R. ஜீவன் லதா ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு, 28.02.2025 ம் தேதியின் படி வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 17,00,00,208.60/- (ரூபாய் பதினேழு கோடியே இருநூற்று எட்டு மற்றும் பைசா அறுபது மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தக்கூடிய விகிதத்தில் அன்றாடம் சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 2025 மே 20 ம் தேதியன்று விற்பனை செய்யப்படும்.

அடிப்படை விலை, டேவணித்தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு :

| அசையா சொத்துக்களின் விபரம் | அடிப்படை விலை | டேவணித்தொகை (10%) |
|---|---|---|
| அசையா சொத்து (கிரைய ஆவண எண். 2429/1995, கிரைய ஆவண எண். 2430/1995 & கிரைய ஆவண எண். 2725/2015 ன் படி திரு B ஸ்ரீராமுலு என்பவருக்கு சொந்தமானது) | ரூ. 33,57,32,166/- | ரூ. 33,57,32,16.60/- |

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம், ராஜா நகரில் சர்வே எண்கள். 101/1 ல் அமையப்பெற்ற ஏக்கர் 2.93 மற்றும் 100/1 ல் அமையப்பெற்ற ஏக்கர் 0.11 என மொத்தம் 3.04 ஏக்கர் பரப்பில் உள்ள சொத்து.

இனம் A - கிரைய ஆவண எண். 2429/1995 ன் படி)
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம்:

| சர்வே எண் | பரப்பு ஏக் - செண்ட் | தரம் ரூ. பை. | பகுப்பு |
|---|---|---|---|
| 101/1 | 2.93 | 4.95 | புஞ்சை / தோட்டம் |
| 100/1 | 0.11 | 0.30 | புஞ்சை / தோட்டம் |

இதில் இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி, தெற்கு புறம் உள்ள 1.00 ஏக்கர்.
எல்லைகளாவன : மேற்கு - சர்வே எண். 102/1 ல் G. ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - தென்வடல் சௌரிபாளையம் சாலை, தெற்கு - விற்பவரின் மீதி இடங்கள், வடக்கு - சஜினி மில்ஸ் இடங்கள்.

இனம் B - கிரைய ஆவண எண். 2430/1995 ன் படி)
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம்:

| சர்வே எண் | பரப்பு ஏக் - செண்ட் | தரம் ரூ. பை. | பகுப்பு |
|---|---|---|---|
| 101/1 | 2.93 | 4.95 | புஞ்சை / தோட்டம் |
| 100/1 | 0.11 | 0.30 | புஞ்சை / தோட்டம் |

இதில் இத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படி, உள்ள 0.51-1/2 ஏக்கர்.
எல்லைகளாவன : மேற்கு - திருமதி G. ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - விற்பவரின் இடம், தெற்கு - திரு B. ஸ்ரீஹரி இடம், வடக்கு - வாங்குபவரின் இடம்.

இனம் C - கிரைய ஆவண எண். 2725/2015 ன் படி)
கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பீளமேடு சார்பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுக்கா, எண். 53, சௌரிபாளையம் கிராமம், ராஜா நகர், கோயமுத்தூர்.

| சர்வே எண் | பரப்பு ஏக் - செண்ட் | தரம் ரூ. பை. | பகுப்பு |
|---|---|---|---|
| 101/1 | 2.93 | 4.95 | புஞ்சை / தோட்டம் |
| 100/1 | 0.11 | 0.30 | புஞ்சை / தோட்டம் |

இதில் உள்ள 1 செண்ட், எல்லைகளாவன : மேற்கு - திருமதி G. ருக்மணியம்மாள் & பிறரின் இதர இடங்கள், கிழக்கு - விற்பவரின் இடம், தெற்கு - திரு B. ஸ்ரீஹரி இடம், வடக்கு - வாங்குபவரின் இடம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து ஜாமீன் பெற்ற கடனளித்தவரின் வலைதளம் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx மற்றும் வலைதளம் https://sarfaesi.auctiontiger.net யை பார்வையிடவும். குறிப்பு : 09.04.2025 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் & 10.04.2025 அன்று தினமணி ஆகிய செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட முந்தைய விற்பனை அறிவிப்பு திரும்ப பெறப்பட்டுள்ளது.

தேதி : 10.04.2025
இடம் : கோயமுத்தூர்
LAN : 80000533, 80001001, 80002237, 80002243 & 80003789

ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் - க்காக
ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
(97109 17596, 88280 4208)

Chola
Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: எண்.1073, கதவு எண். 301 & 302, 3வது தளம், ரஹேஜா செண்டர், அவினாசி சாலை, கோயம்புத்தூர் - 641 018.
கிளை அலுவலகம்: எண்.16/1, 3வது தளம், S&S ஆர்கேட், கண்ணபிரான் காலனி, B S சுந்தரம் சாலை, ஊத்துகுளி சாலை, திருப்பூர் - 641 601.
கிளை அலுவலகம்: 3வது தளம், பிருந்தாவன் சாலை, நியூ ஃபேர்லேண்ட்ஸ் சேலம் - 636016
கிளை அலுவலகம்: கதவு எண். 44/41A, 2வது தளம், அன்லிமிடெட் அப்ஸ்டர்ஸ், கரூர் வைஸ்யா வங்கி அருகில், குமலன்குட்டை, பெருந்துறை சாலை, ஈரோடு-638011. தொடர்புக்கு: திரு.தியாகராஜன் கைபேசி: 9940516215 & திரு.ஸ்டாலின் - கைபேசி : 96559 56703 & திரு. தியாகு-கைபேசி: 9894265133

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9 (1)-ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.
இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், ஜாமீன் பெற்ற கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு, M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் (இது முதல் M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-என்று அழைக்கப்படும்) அசல் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளன. அந்த ஜாமீன் சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், நாங்கள் பொது மின்னணு ஏலத்தை https://bankauctions.in/ என்ற வலைதளம் மூலம் நடத்த உள்ளோம்.

| கணக்கு எண். மற்றும் கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் | தேதி & பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின் படி தொகை | சொத்துக்களின் விபரம் | குறைந்தபட்ச விலை டேவணித்தொகை ஏல உயர்வு தொகை |
|---|---|---|---|
| கடன் கணக்கு எண்: X0HEUMA00002912225 1. செல்வம்.K, 2. செல்வதங்கம்.P, 3. பூங்கொடி.S, 4. பழனிசாமி. K, அனைவரின் முகவரி: எண்.2/29, சின்னவேலம்பட்டி, கோவில் அருகில், வேலம்பட்டி, திண்டுக்கல் - 624 617. 5. M/s. ஸ்ரீ அம்மன் தையல் நிலையம், எண்.47, 48, பூலுவப்பட்டி, திருப்பூர் - 641 602. 6.M/s.அமிஷ் கார்மெண்ட்ஸ் எண்.47, 48, பூலுவப்பட்டி, திருப்பூர் - 641 602. | 28.11.2022 & 25.11.2022 அன்று வரை ரூ. 1,20,37,123/- | வகை எண் -1: திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை-I துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் தாலுகா, நெருபேரிச்சல் கிராமத்தில், சர்வே புல எண்.177/1-ன் படி 7.59 ஏக்கர் புஞ்சை நிலம், வீட்டு மனை பிரிவுகளாக மேம்படுத்தப்பட்டு ஸ்ரீவிக்னேஷ்வரா நகர் என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவில் மனை எண்.48-ல் உள்ள நிலத்துடன் கூடிய கட்டிடம், கீழ்கண்ட எல்லைகள் மற்றும் அளவுகளுக்குட்பட்டது. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் எல்லைகள்: 30 அடி அகல தெற்கு வடக்கு மனை பிரிவு சாலைக்கு கிழக்கே, மனை எண்.49-க்கு மேற்கே, 24 அடி அகல கிழக்கு மேற்கு மனை பிரிவு சாலைக்கு தெற்கே, மனை எண்.47-க்கு வடக்கே. இதன் மத்தியில் கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் 40 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 48 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில்: 42 அடி, தெற்கு வடக்காக மேற்கு பகுதியில் குறுக்கில் 40 அடி. மொத்தம்: 1804 சதுர அடி பரப்பளவு நிலம் அதனுடன் மனை பிரிவு சாலை பயன்படுத்தும் உரிமை பொது பயன்பாடு மற்றும் பொது நடைபாதைகள். வகை எண் - 2: திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை-I துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் தாலுகா, நெருபேரிச்சல் கிராமத்தில், சர்வே புல எண்.177/1-ன் படி 7.59 ஏக்கர் புஞ்சை நிலம், வீட்டு மனை பிரிவுகளாக மேம்படுத்தப்பட்டு ஸ்ரீவிக்னேஷ்வரா நகர் என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவில் மனை எண்.47-ல் உள்ள நிலத்துடன் கூடிய கட்டிடம், கீழ்கண்ட எல்லைகள் மற்றும் அளவுகளுக்குட்பட்டது மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் எல்லைகள்: 30 அடி அகல தெற்கு வடக்கு மனை பிரிவு சாலைக்கு கிழக்கே, மனை எண்.45-ன் வடக்கு பகுதியின் 1 பகுதிக்கு மேற்கே, மனை எண்.48-க்கு தெற்கே, மனை எண்.46-க்கு வடக்கே. இதன் மத்தியில் கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் 48 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 56 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில்: 40 அடி, தெற்கு வடக்காக மேற்கு பகுதியில் குறுக்கில் 41 அடி. மொத்தம்: 2106 சதுர அடி பரப்பளவு நிலம் அதனுடன் மனை பிரிவு சாலை பயன்படுத்தும் உரிமை பொது பயன்பாடு மற்றும் பொது நடைபாதைகள் இரண்டும் சேர்த்து 3910 சதுர அடி பரப்பளவு நிலம் அதனுடன் மனை பிரிவு சாலை பயன்படுத்தும் உரிமை பொது பயன்பாடு மற்றும் பொது நடைபாதைகள். | ரூ.1,23,00,000/- ரூ.12,30,000/- ரூ.1,00,000/- |
| கடன் கணக்கு எண்கள்: X0HEEDE00002837229 & HE02EDE00000005376 1. ராதாகிருஷ்ணன்.ES 2. லோகேஸ்வரி.M 3. செல்வராஜ்.S 4. ஸ்ரீ சரஸ்வதி அண்டு கோ அனைவரின் முகவரி: 14/5, திருவள்ளுவர் தெரு, சூரம்பட்டி, ஈரோடு, தமிழ்நாடு - 638 009. 3. சரஸ்வதி.S 14/4, திருவள்ளுவர் தெரு, சூரம்பட்டி, ஈரோடு, தமிழ்நாடு - 638 009. | 29-01-2022. & 23-01-2022. அன்று வரை ரூ. 1,11,65,075.05/- | ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுகா, சூரம்பட்டி கிராமத்தில் பழைய சர்வே புல எண்.76A, P.A. 3.20, மறு சர்வே எண்.134/4, பழைய சர்வே புல எண்.77A, P.A. 0.60, பழைய சர்வே புல எண். 77D, P.A. 0.44, மறு சர்வே எண். 140/3, P.A. 4.24 -ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும், கீழ்கண்ட எல்லைகள் மற்றும் அளவுகளுக்கு உட்பட்டது. வகை எண்.1 : தெற்கு வடக்கான நடைபாதைக்கு வடக்கே, வீட்டு மனை எண்.35க்கு கிழக்கே, வகை எண்.2-க்கு தெற்கே, சின்னம்மாள் அவர்களின் சொத்திற்கு மேற்கே, கீழ்கண்ட அளவுகளின் படி கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 22 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 21 ½ அடி, தெற்கு வடக்காக இருபுறமும் - 12 அடி மொத்தம் 261 சதுர அடி வீட்டு மனை, அனைத்து வழக்கமான சாலைகள் மற்றும் பொது சாலைகள் பயன்படுத்துவதற்கான உரிமை. வகை எண்.2 : வீட்டு மனை எண்.13. கிழக்கு மேற்காக சாலைக்கு தெற்கே, 3வது நபரின் நிலத்திற்கு மேற்கே, வகை எண்.1-க்கு வடக்கே, முருகேசன் சாவித்ரி, பாக்கியலஷ்மி ஆகியோர்களின் சொத்திற்கு கிழக்கே. கீழ்கண்ட அளவுகளின் படி கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 28 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 22 அடி, தெற்கு வடக்காக இருபுறமும் - 76 அடி மொத்தம் 1900 சதுர அடி வீட்டு மனை அதனுடன் அனைத்து வழக்கமான சாலைகள் மற்றும் பொது சாலைகள் பயன்படுத்துவதற்கான உரிமை. இரண்டும் சேர்த்து 2161 சதுர அடி மனை மற்றும் வீட்டு மனை எண்.39-ல் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமை உட்பட. இந்த சொத்து முன்னர் சூரம்பட்டி பேரூராட்சி, வார்டு 8, திருவள்ளுவர் தெரு, மற்றும் தற்போது ஈரோடு மாநகராட்சியில் உள்ளது. | ரூ.70,00,000/- ரூ.7,00,000/- ரூ.1,00,000/- |

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 28.04.2025, (ஒவ்வொன்றும் 3 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புடன்) காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை, டேவணித்தொகை சமர்பிக்க கடைசி தேதி: 25.04.2025, மாலை 5.30 மணி வரை
சொத்துகளை பார்வையிடும் தேதி : 15.04.2025, மற்றும் 16.04.2025, (காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை)

1) விருப்பமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் வலைதளம் https://bankauctions.in & www.cholamandalam.com/ news/auction-notices-யை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விபரங்களுக்கும், உதவிக்கும் மற்றும் மின்னணு ஏலத்துக்கான உத்தேச ஏலதாரர்கள் திரு.முகம்மத் ரஹீஸ் - 81240 00030 / 6374845616, மின் ஏல பயிற்சிக்கு மட்டும் Ms.4 Closure -ன் ரேகா அவர்களை தொலைபேசி எண் -8142000062-ல் அணுகவும். மின்னஞ்சல் முகவரி : CholaAuctionLAP@chola.murugappa.com-ல் தொடர்பு கொள்ளலாம்.
2) விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தேவைப்படும் மேல் விபரங்களுக்கும் மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கும்: https://bankauctions.in & www.cholamandalam.com/ news/auction-notices-என்ற வலைதளத்தை தயவு கூர்ந்து பார்வையிடவும்.
இவ்வறிவிப்பு, சட்டபூர்வமான பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9(1)ன் கீழான 15 நாட்கள் கெடு அறிவிப்புமாகும்.

தேதி : 11.04.2025
இடம் : திருப்பூர் / ஈரோடு

அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்